DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No:160/2023**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 18 (LW -21)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.டாக்டர்.சிவானந்தம் | Caste | : | |
| Father Name | : | திரு.மணி | Calling | : | அரசு மருத்துவர் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **16.12.2025.**

**PW -18 (LW -21 )**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரசு நாமக்கல் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் அதே துறையில் மருத்துவ கல்லூரியானது நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்ந்து பணியாற்றிய பொழுது கடந்த 07.07.2021–ம் தேதி அன்று மதியம் 01.00 மணியளவில் காட்டுபுத்தூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கிரேடு–2 பிசி 1690 திரு.கருணாநிதி என்பவர் மூலம் திரு.செல்லப்பன் த/பெ.ராமசாமி வயது 55/2021 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை வழங்குமாறு காட்டுப்புத்தூர் காவல் நிலைய குற்ற எண்.204/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(ii) இதச தேதி 10.06.2021 மேலும் 07.07.2021–ம் தேதி அன்று 302 இதசவிற்கு மாற்றம் செய்யப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் என்னை அனுகிறார்.

II ADJ COURT TRICHY

நான் மேற்கண்ட பிரேதத்தை மருத்துவ ஆவணங்களின் மூலம் அடையாளம் கண்டு 07.07.2021 அன்று மதியம் 01.10 மணிக்கு உடற்கூறாய்வு ஆரம்பித்து நிறைவு செய்தேன். பிரேதத்தின் மீது கண்ட உடற்கூறு ஆய்வுக்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் மற்றும் உடற்கூறாய்வின் பொழுது நான் கண்ட சங்கதிகள் அனைத்தையும் எனது அறிக்கையில் விரிவாக பதிவு செய்துள்ளேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.16** ஆகும். எனது இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.17** ஆகும்.

உடற்கூறு ஆய்வு செய்ததில் இறந்த நபர் அவர் உடம்பில் பல உறுப்புகள் செயல் இழந்ததன் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்கலாம் என இறுதி கருத்துரை கொடுத்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | இந்த வழக்கில் போலீசார் உங்களிடம் ஆயுதங்களை காட்டி விசாரணை செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். பொதுவாக போலீசார் எங்களை விசாரிக்கும் பொழுது எந்த ஆயுதங்களையும் காட்டி விசாரிப்பது கிடையாது. அப்படி விசாரித்தால் ஒரு நல்ல தீர்வுக்கு வர முடியும். |
| **கேள்வி** | அவர் உணவு அருந்துவதற்காக அதற்கென குழாய் பொருத்தப்பட்ட நிலையிலேயே இறந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அதேபோல் மூச்சு குழாயும் தனியாக பொருத்தப்பட்டு இருந்தது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | மேற்சொன்ன இரண்டு குழாய்களும் எவ்வளவு காலத்திற்கு முன்பு வைக்கப்பட்டது என சொல்ல முடியுமா? |
| **பதில்** | அதற்கான மருத்துவ சிகிச்சை ஆவணம் இருந்தால் சொல்ல முடியும். |
| **கேள்வி** | பல உறுப்புகள் செயல் இழந்து இறப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் மற்றும் கடைசியாக இருதயம் ஆகியவை செயல் இழந்து விடும். |

HIGH COURT AUTHORITY

II ADJ COURT, TRICHY

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 16.12.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 16.12.2025